


**10. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆக்லாந்தில், நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

2. மனித - விலங்குகள் மோதலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தி உள்ளார்.

3. மக்கள் எளிதில் அணுகும் அரசாக த.வெ.க. தலைமையிலான அரசு திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.விஜய் கூறியுள்ளார்.

4. வேலூர் சிப்பாய் புரட்சியின் 220-வது ஆண்டு நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

5. இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று பிற்பகல் தொடங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி தனது 3 நாடுகள் பயணத்தின் இறுதிகட்டமாக இன்று நியூசிலாந்து புறப்பட்டுள்ளார்.

ஆக்லாந்தில், நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன், இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார்.

வணிகம், வர்த்தகம், பாதுகாப்பு பிரிவுகளில் கடந்த 2 ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

தமது பயணத்தின் ஒருபகுதியாக பிரதமர், அங்குள்ள தொழில்முனைவோர் மற்றும் விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடுகிறார். இந்திய வம்சாவளியினர் இடையேயும் அவர் உரையாற்ற உள்ளார்.

40 ஆண்டுகளுக்கு பின்னர் நியூசிலாந்து செல்லும் முதல் பிரதமர், திரு. நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பிரதமர் தமது ஆஸ்திரேலியா பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அங்கிருந்து நியூசிலாந்து புறப்பட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர்

வந்தே மாதரம் தேசிய பாடல், தேசத்திற்கான கடமையை நிலைநாட்டி விடுதலை போராட்ட வீரர்களுக்கு

உத்வேகம் அளித்ததாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஷிம்லாவில் வந்தே மாதரம் சர்வதேச கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், இப்பாடல் விடுதலை போராட்ட வீரர்களுக்கு துணிச்சலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியதாக பெருமிதம் தெரிவித்தார்.

ஒரே தேசம்! ஒரே அரசியல் சாசனத்திற்கான வலுவான அடித்தளத்தை சர்தார் வல்லபாய்பட்டேல் ஏற்படுத்தியதை சுட்டிக்காட்டினார்.

தேசபக்தி என்பது வெறும் வார்த்தைகளாக மட்டுமல்லாமல், அனைத்து செயல்களிலும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றார்.

வந்தே மாதரம் தேசிய பாடல் மற்றும் சர்தார் வல்லப்பாய் பட்டேலின் சீரிய கொள்கைகளுடன் ஒருங்கிணைந்த உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்க குடிமக்கள் உறுதியேற்க வேண்டுமென்றும் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

மனித விலங்குகள் மோதல் சம்பவங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் உயர் முன்னுரிமையுடன் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

கோவை மத்திய வன அலுவலர் பயிற்சி மையத்தில் இதுதொடர்பான தேசிய கருத்தரங்கை இன்று தொடங்கி

வைத்து பேசியஅவர், இது தொடர்பான விளக்கங்களை அளித்தார்.

இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் பேசுகையில் மனித விலங்கு மோதலை தடுக்க நவீன தொழில்நுட்ப முறைகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

முன்னதாக மனித விலங்கு மோதல் குறித்த தகவல் கையேட்டினை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷ்

நாட்டின் 50 சதவிகித மின் தேவை, தூய்மை எரிசக்தியின் மூலம் பெறப்பட்டதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷ் தெரிவித்துள்ளார்.

நம் நாட்டின் தூய்மை எரிசக்தி கட்டமைப்பின் திறனையும், மேம்பாட்டையும் இது பறைசாற்றுவதாக சமூக வலைதளப்பதிவில் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் நம் தேசம் நிலையான வளர்ச்சியுடன், வேகமான முன்னேற்றப்பாதையில் ஆற்றலுடனும், உறுதியுடனும் பயணிப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் 18 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான 3 ஒப்பந்தங்கள் L & T

நிறுவனத்துடன் கையெழுத்தானதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

கரூர் வெண்ணெய் மலையில் இன்று மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில், தாய்மாமன் தங்க மோதிர திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

அரசு அலுவலகங்களில் மக்களுக்கு உரிய மரியாதை வழங்கப் படுவதாக கூறியஅவர், ஊழலற்ற ஆட்சியை தாம் வழங்குவதாக குறிப்பிட்டார்.

மக்கள் எளிதில் அணுகும் அரசாக த.வெ.க. ஆட்சி திகழும் என்று கூறிய அவர், தொகுதி மறுவரையறையை அரசு எப்போதும் ஏற்காது என்று கூறினார்.

மேகதாது விவகாரத்தில் தி.மு.க. நீதிமன்றத்தில் முறையாக வாதிடவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

தேர்தல்களில் பணபலம் செல்லாது என்பது தமது வெற்றியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கும் முதலமைச்சர், மணவாசி ஊராட்சியில் 13 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையிலான ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள் தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி தனியார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

கரூரில் முதலமைச்சர் சாலை பேரணியிலும் பங்கேற்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

விேனாத்

காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கை பெற்றிட மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பபட்ட பள்ளி வகுப்பறைகள் உள்ளிட்ட 74 அரசு கட்டடங்களை இன்று திறந்து வைத்த பேசியஅவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் ஆர்சுத்திப்பட்டு கிராமத்தில் நெல் மூட்டைகள் சரிந்து உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அமைச்சர் வழங்கினார்.

இவ்விபத்தில் காயமடைந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையையும் அவர் அளித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

சிப்பாய் புரட்சி

நாட்டின் சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட வேலூர் சிப்பாய் புரட்சியின் 220-ம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி சிப்பாய் புரட்சி நினைவுத் தூணிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லீலா அலெக்ஸ் மலர்

வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இடைத்தேர்தல்

தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம், தாராபுரம், மதுராந்தகம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்க கோரிய வழக்கின் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கடலூர்

கடலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல் கட்ட சுய கணக்கெடுப்பு பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் வரும் 14-ம் தேதிவரை பொதுமக்கள் தங்கள் குறைகள் தொடர்பான கோரிக்கை

மனுக்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் அளிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மிருணாளினி கூறியுள்ளார்.

இம்மாவட்டத்தில் பருவமழைக் காலங்களில் இடி மின்னலால் மனித உயிரிழப்புகள் தொடர்ந்து ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, அது தொடர்பான வழிமுறைகளை ஆட்சியர் வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை மாவட்டத்தில் விவசாயிகள் வரும் 31-ம் தேதிக்குள் பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்து பயனடையுமாறு ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தோட்டக்கலை பயிர்களை கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து காப்பாற்ற விவசாயிகள் மேலாண்மை பணிகளில் ஈடுபட வேண்டுமென ஆட்சித்தலைவர் திரு. மதுபாலன் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு செவிலியர் பயிற்சிப்பள்ளி வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் சகி ஒருங்கிணைந்த சேவை திட்டப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. விஷ்ணு மஹாராஜன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மதுரை சின்ன சொக்கிகுளத்தில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மகளிர் மதி அனுபவ அங்காடி மற்றும் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கட்டடம் அமையவுள்ள இடத்தை ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா இன்று ஆய்வு செய்தார்.

தொடர்ந்து அரசு இராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் குழந்தைகள் நலம் மற்றும் ஆராய்ச்சி மைய கட்டடப் பணிகளையும் அவர் பார்வையிட்டார்.

திருப்பூர் மாவட்டத்தில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வழங்கப்படவுள்ள நெகிழி செயலாக்க இயந்திர இயக்குநர் பயிற்சிக்கு தாட்கோ இணையதளம் மூலம் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு. மனீஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் குடும்ப அட்டைகளில் பெயர்மாற்றம் திருத்தம் மற்றும் முகவரி மாற்றத்திற்கான சிறப்பு குறைதீர் நாள் முகாம் 11 வட்டங்களிலும் நாளை

நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரத்தீக் தாயள் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று பிற்பகல் தொடங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பெல்ஜியத்தில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் Manas Dhamne - ஸ்பெயினின் Miguel Damas-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

பிரிஸ்டலில் நடைபெற்ற இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது 20-20 கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

5-வது இறுதி போட்டி சௌத் ஆம்டனில் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியின் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் இன்றிரவு ஸ்பெயின் பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற முதல் காலிறுதியில் ஃபிரான்ஸ் - மொராக்கோவை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖